இறக்கை: 6 இறகு: 9

# காக்கைச் சிறகினிலே

இலக்கிய மாத இதழ்

செப்டம்பர் 2017 | விலை ₹ 25



யதீந்திரா
எஸ்.இளங்கோ
க.பஞ்சாங்கம்

ஆ.சிவசுப்பிரமணியன்
பேராசிரியர் மௌனகுரு
மு.செல்லா

ஆய்வுத்திருட்டு

எஸ்.சீனிவாசன்

# தமிழியல் ஆய்வில் தொடரும் (ஆராய்ச்சி) ஊழல்கள்

## வெளித் தமிழ் நூல்கள் : திருவாசக ஆய்வை முன்வைத்து






வரலாற்றுப் பாரம்பரியமிக்க ஆற்றல்சால் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் தமிழியற் புலத்திலுள்ள ஒப்பிலக்கியத்துறையில் உதவிப் பேராசிரியராகப் பணிபுரியும் திரு. உ.கருப்பத்தேவன் 'ஒப்பிலக்கியம் இனவரைவியல் சமூகம்' (2008) என்ற நூலிலிருந்து 21 முதல் 52 வரையிலான மொத்தம் 32 பக்கக் கருத்துக்களை அதன் ஆசிரியரிடத்தில் முன் அனுமதி பெறாமல் தனதாக்கிக்கொண்டுள்ளார். மேற்குறித்த நூற்பக்கங்களிலுள்ள உட்தலைப்புகளின்கீழ் அமைந்திருக்கும் சொற்கள், சொற்றொடர்கள், பத்திகள், மொழிநடை முதலானவற்றை அச்சு மாறாமல் அப்படியே பக்கம் பக்கமாகப் பெயர்த்தெடுத்துத் தமது "ஒப்பிலக்கியக் கொள்கைகள் : நோக்கும் போக்கும்" (2015) என்ற நூலில் (பக்.127-152) எடுத்தாண்டுள்ளார். இந்த ஆய்வு/ கருத்துத் திருட்டின் பிரஸ்தாபங்கள் குறித்து 'கீற்று.காம்' வழியும் (2016.2016); நவம்பர், 2016 காலச்சுவடு இதழ் வழியும் யாம் பிரபலப்படுத்தினோம்.

இது ஒருபுறம் இருக்க, கல்வித்தளத்தில் திரு. உ.கருப்பத்தேவன் தொடர்ந்து ஊழல்கள் செய்து வருவதை வாசகர்களின் பின்னூட்டங்கள் வழி அறிய நேர்ந்தது. அவரது முறையற்ற செயல்கள், நேர்மைக்குப் புறம்பான குற்றச்சாட்டுக்கள், தவறான பதிவுகள், தவறுகளைச் சுட்டிக்காட்டுவோரை மிரட்டுதல், ஆகியன அவரது பிற ஆராய்ச்சி ஊழல்களையும் இப்போது வெளிக்கொணரக் காரணங்களாக அமைந்தன. அவற்றைத் தமிழ் ஆய்வுலகிற்குச் சற்று விரிவாகவே முன்வைக்கப்படுகிறது. தமிழியல் ஆய்வு மற்றும் ஆராய்ச்சித் தளத்தில் நிலவும் கருத்துத் திருட்டு ஊழல்களைக் களையும் முன்னெடுப்பு முயற்சியே இது.

திரு. உ.கருப்பத்தேவன் மதுரை காமராசர் பல்கலைக்கழகத் தமிழ்த் துறையில் பக்தி இலக்கிய ஆய்வில் 'திருவாசகத்தில் இலக்கிய நலன்கள்' என்னும் தலைப்பில் ஆய்வு செய்து 2006 ஆம் ஆண்டு முனைவர் பட்டம் பெற்றார். 2010-ஆம் ஆண்டு முதல் மதுரை காமராசர் பல்கலைக்கழக ஒப்பிலக்கியத்துறையில் உதவிப் பேராசிரியராகப் பணியில் சேர்ந்துள்ளார்.